

# சப்ளையர் நடத்தைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகள்

## Know it. Speak it. Live it.

நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் நமது மதிப்புகளை உயர்த்துவோம்

Magna International

# பொருளடக்கம்

**ெ ாழில் நடவடிக்கைகளில் ஒருமைப்பாட்டை வலியுறு ் து ல் ............... 3**

ஏகபோக தடை மற்றும் போட்டிச் சட்டங்கள் ........................................ 3

ஊழல் எதிர் ் பு மற்றும் இலஞ்ச எதிர் ் புச் சட்டம்................................ 4

பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு .......................................................... 5

தடைகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டு ் பாட்டுச் சட்டங்கள்...................... 7

முரணான பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்கள்.......................... 7

**பணியிடத்தில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல் .............................. 8**

நெறிமுறையான தொழிலாளர் தரநிலைகள் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல்.................................................................. 9

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடங்கிய நிலை ................................... 11

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு......................................................... 13

சுற்றுச்சூழல் பொறுப்பு.......................................................................... 13

**நமது செயல்பாடுகளின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்து ல் ....... 15**

அக்கறை சார்ந்த முரண்பாடு ............................................................... 15

Magna -இன் தகவல்கள் மற்றும் அறிவுசார் சொத்துக்களின் பாதுகாப்பு.................................................................................... 16

**நல்ல கவல் ெ ாடர்பின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்து ல்..... 17**

கவலைகளைப் புகாரளித்தல் மற்றும் பழிவாங்குதல் இல்லாமை... 18

சப்ளையர் இடர் நிர்வாகக் கோரிக்கைகள் ........................................... 19

பிற தேவைகளுடனான முரண் ாடு....................................................... 19

ஆதரவு சட்ட இணக்க நிபுணர்கள் ........................................................ 20

நமது சப்ளையர் நடத்தை விதிகள் மற்றும் நெறிமுறைகள் Magna உடன் வர்த்தகம் செய்யும்போது அல்லது Magna உடன் வர்த்தகம் செய்வதற்கு நீங்கள் தொடர்புகொள்ளும் இணை சப்ளையர்களை சிறப்பாக கையாள்வதற்கான வழிமுறைகளை வழங்குகிறது.
நமது ஒட்டுமொத்த உறவின் ஒருங்கிணைந்த பகுதியாக இது அமைகிறது மேலும் அதை நீங்கள் புரிந்துகொண்டு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

# தொழில் நடவடிக்கைகளில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

Magna-இல், எங்களுக்கும் எங்கள் சப்ளையர்களுக்கும் உயர்ந்த நன்னெறித் தரநிலைகளை அமைத்துள்ளோம்.

Magna-இன் சப்ளையர்கள், ஆலோசகர்கள், சார்பற்ற ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் அல்லது எங்கள் சார்பாக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளும் வேறு எந்த மூன்றாம் தரப்பினரும் ("சப்ளையர்கள்") அவர்கள் எங்கு வணிகம் செய்தாலும் அவர்களுக்குப் பொருந்தும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், தரநிலைகள் (ஒட்டுமொத்தமாக, "சட்டங்கள்") மற்றும் Magna-இன் கொள்கைகள் விதிகள் மற்றும் நோக்கத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் எப்போதும் நேர்மையுடன் செயல்பட வேண்டும். இதன்படி, அவர்களின் சொந்த சப்ளையர்களும் இந்தக் கோட்பாட்டின் தேவைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

இந்தக் கோட்பாட்டின் தேவைகள் என்பவை Magna உடனான உங்கள் உறவில் பொருந்தக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுடன் கூடுதலாக உள்ளன. எங்கள் சப்ளையர்களுக்குப் பொருந்தும் சட்டங்கள் ஏராளமாக உள்ளதுடன், அதிகார வரம்பிற்கு ஏற்ப மாறுபடுகின்றன, பின்பற்ற வேண்டிய சில முக்கியமான கொள்கைகள் பின்வருமாறு:

## ஏகபோக தடை மற்றும் போட்டிச் சட்டங்கள்

கட்டற்ற மற்றும் நியாயமான போட்டிக்கு மதிப்பளித்தே நாங்கள் தீவிரமாகப் போட்டியிடுகிறோம். எங்கள் சப்ளையர்களிடமும் நாங்கள் அதையே எதிர்பார்க்கிறோம்

வேண்டும் மற்றும் போட்டியைத் தவறான முறையில் குறைக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடக்கூடாது. விலை நிர்ணயம், தள்ளுபடிகள் அல்லது விற்பனை விதிமுறைகளை நிர்ணயித்தல், உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல், சந்தைகளைப் பிரித்தல், வாடிக்கையாளர்களை ஒதுக்கீடு செய்தல், ஏல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்களைப் புறக்கணித்தல், பணியாளர் ஊதியத்தை நிர்ணயித்தல் அல்லது ஒருவருக்கொருவரின் பணியாளர்களைப் பணியமர்த்துவதைத் தவிர்த்தல் போன்ற வகைகளில் போட்டியாளர்களுடன் உடன்படுவது போன்றவை தடைசெய்யப்பட்ட செயல்களின் எடுத்துக்காட்டுகள் ஆகும். சில அதிகார வரம்புகளில், முக்கியமான வணிகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வது சட்டவிரோதமாகும்.



[Magna-இன் ஏகபோகத் தடை மற்றும் போட்டியிடல் கொள்கையைப் படிக்கவும்.](#)

**Magna-இன் சப்ளையர்கள் அவர்கள் எங்கு வணிகம் செய்தாலும் அவர்களுக்குப் பொருந்தும் சட்டங்கள் மற்றும் Magna கொள்கைகளின் விதிகள் மற்றும் நோக்கத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலம் எப்போதும் நேர்மையுடன் செயல்பட வேண்டும்.**

# ஊழல் எதிர்ப்பு மற்றும் இலஞ்ச எதிர்ப்புச் சட்டம்

முறையற்ற வணிக அனுகூலத்தைப் பெறுவதற்கு எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் மதிப்புமிக்க எதையும் வழங்குவதைத் தடைசெய்யும் பொருந்தக்கூடிய அனைத்துச் சட்டங்களுடன், துல்லியமான கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை வைத்திருக்க வேண்டிய சட்டங்களையும் எங்கள் சப்ளையர்கள் பின்பற்ற வேண்டும்.

சப்ளையர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் ஊழல் எதிர்ப்பு மற்றும் இலஞ்ச எதிர்ப்புச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும், குறிப்பாக அரசு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நாங்கள் அல்லது எங்கள் சப்ளையர்கள் செயல்படும் எந்தவொரு குறிப்பிட்ட அதிகார வரம்பின் குறிப்பிட்ட சட்டங்கள் அல்லது ஏற்கனவே உள்ள வணிக நடைமுறைகளைப் பொருட்படுத்தாமல், "சௌகரிக பேமெண்ட்கள்" அல்லது "கிரீஸ் பேமெண்ட்கள்" (அதாவது, ஒரு நபர் அல்லது நிறுவனம் சட்டப்பூர்வமாகப் பெற உரிமை உள்ள வழக்கமான சேவைகளைப் பெறுவதற்குக் குறைந்த அளவிலான கீழ்நிலை அரசு அதிகாரிகளுக்குச் சிறிய சிறிய தொகைகளைக் கொடுத்தல். ஒரு தொலைபேசி அல்லது பிற அத்தியாவசிய இணைப்பை விரைவுப்படுத்துவதற்காகப் பணம் கொடுத்தல் ஓர் எடுத்துக்காட்டாகும்). கொடுப்பதை Magna தடைசெய்கிறது.



Magna-இன் இலஞ்சம் மற்றும் முறையற்ற பேமெண்ட்களைப் பற்றிய கொள்கையைப் படிக்கவும்.

## பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு

ஒரு வணிக முடிவைத் தூண்டுவதற்கு அல்லது தேவையற்ற முறையில் செல்வாக்கு செலுத்துவதற்காக (எ.கா. சப்ளையருக்கு வணிகத்தை வழங்குதல், சாதகமான விதிமுறைகளை வழங்குதல்) Magna பணியாளருக்கு வழங்கப்படும் எந்தவொரு பரிசு அல்லது பொழுதுபோக்கும் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. நீங்கள் ஒரு Magna பணியாளருக்குப் பரிசு அல்லது பொழுதுபோக்குகளை வழங்க விரும்பினால், அது நியாயமானதாக இருக்க வேண்டும், எப்போதாவது மட்டுமே வழங்கப்பட வேண்டும் மற்றும் சாதாரண மதிப்புடையதாக இருக்க வேண்டும்.



இதன்படி, சப்ளையர்களிடமிருந்து பரிசு மற்றும் பொழுதுபோக்குகளை Magna பணியாளர்கள் கோருவதைத் தடைசெய்கின்றோம். ஒரு Magna பணியாளர் உங்களிடம் பரிசு அல்லது பொழுதுபோக்கைக் கோரினால், அதை நீங்கள் உடனடியாகப் புகாரளிக்க வேண்டும். (கீழேயுள்ள மீறல்களை புகாரளிப்பது என்பதைப் பார்க்கவும்)

Magna-இன் பரிசுகள் மற்றும் பொழுதுபோக்குக் கொள்கையை படிக்கவும்.

## தடைகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டு˙பாட்டுச் சட்டங்கள்

எங்கள் சப்ளையர்கள் பொருந்தக்கூடிய அனைத்து ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கும், தடைசெய்யப்பட்ட நாடுகள், நிறுவனங்கள், நபர்கள் அல்லது தொழில்துறைகளுடனான வணிக உறவுகளைத் தடைசெய்யும் அல்லது கட்டுப்படுத்தும் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

[Magna-இன் பொருளாதாரத் தடைகள் மற்றும் வர்த்தகத் தடைகளின் கொள்கையை ˙ டிக்கவும்.]



## முரணான பகுதிகளில் கிடைக்கும் மூல˙பொருட்கள்



அமெரிக்கப் பங்குச் சந்தையில் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பொது நிறுவனம் என்ற வகையில், அமெரிக்கச் சட்டத்தின்படி பல நாடுகளிலிருந்து வரும் தங்கம், தகரம், டங்ஸ்டன் மற்றும் டான்டலம் போன்ற தாதுக்களை நாங்கள் பயன்படுத்துவதைக் கண்காணித்து, விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

கோரப்படும்போது, எங்கள் சப்ளையர்கள் அத்தகைய தயாரிப்புகளில் தங்கள் தாதுக்களைப் பயன்படுத்துவதைக் குறித்து நாங்கள் கோரும் வடிவத்தில் வரையறுக்கப்பட்ட அறிக்கையிடல் கருவி மற்றும் கட்டமைப்பைப் பயன்படுத்தி தரவு மற்றும் அறிக்கைகளை வழங்க வேண்டும். மேலும், சப்ளையர்கள் தங்கள் சப்ளையர்களிடம் அத்தகைய தாதுக்கள் எங்கிருந்து கிடைத்தன என்பதைக் காட்டும், அவர்களின் கண்டுபிடிப்புகளை எங்களுக்கு வழங்கும் இது போன்ற தகவல்களைக் கோர வேண்டும்.



- சப்ளையர்கள் தங்களுக்குப் பொருந்தக்கூடிய சட்டங்களை அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் அத்தகைய சட்டங்களின் விதிகளையும் நோக்கத்தையும் பின்பற்ற வேண்டும்
- போட்டியைக் கட்டுப்படுத்த சப்ளையர்கள் போட்டியாளர்களுடன் இரகசியக் கூட்டு வைக்கக்கூடாது
- அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்குவதிலிருந்து சப்ளையர்கள் கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளனர்
- சப்ளையர்கள் பொருளாதாரத் தடைகள் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்களை மீறக்கூடாது
- பயன்படுத்தப்படும் சில தாதுக்களின் மூலத்தை அடையாளம் காண்பதில் சப்ளையர்கள் Magna-க்கு ஒத்துழைக்க வேண்டும்

# பணியிடத்தில் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

நியாயம், உள்ளடங்கிய நிலை, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவை Magna-இல் நாம் விரும்பும் மதிப்புகளாகும், அவையே நமது செயல்பாடுகளில் நாம் அடைய முயற்சிக்கும் மதிப்புகளும் ஆகும். எங்கள் சப்ளையர்களிடமும் நாங்கள் அதையே எதிர்பார்க்கிறோம்.

# நெறிமுறையான தொழிலாளர் தரநிலைகள் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல்

பொருந்தக்கூடிய அனைத்துத் தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் மனித உரிமைச் சட்டங்களுக்கும் இணங்க Magna உறுதிபூண்டுள்ளது, எங்கள் சப்ளையர்களிடமிருந்தும் அதே உறுதிப்பாட்டைக் கோருகிறோம்.

*Magna* அனைத்து தொழிலாளர்களின் நெறிமுறைகளை கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளது, மேலும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் (UN) மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனத்தின் அடிப்படை மரபுகளுடன் ஒத்துப்போகும் தொழிலாளர் மற்றும் வேலை தரநிலைகளை நாம் கடைப்பிடிக்கிறோம். அனைத்து சப்ளையர்களும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உள்ளார்ந்த கண்ணியம் மற்றும் மரியாதையை அங்கீகரிக்கும் வகையில் ஒப்பிடக்கூடிய தரநிலைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

Magna -இன் உலகளாவிய தொழிலாளர் தர நிலைகளைப் படிக்கவும்

**நியாயமான பணி நிலைகளுக்கான உறுதிப்பாடு**

நமது சப்ளையர்கள் குறைந்தபட்ச ஊதியம், சலுகைகள், கூடுதல் நேரம், வேலை நேரம் மற்றும் பணிபுரியும் நேரம் இடைவெளிகள் மற்றும் ஓய்வு இடைவெளி, விடுப்பு நேரம் மற்றும் சட்டப்படி விடுப்பு வழங்க வேண்டிய நாட்கள் உட்பட்ட (இவை மட்டுமல்ல) பணி நிலைகள் குறித்த பொருத்தமான



சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். பணியாளர்களுக்கு, பணி மற்றும் சொந்த வாழ்க்கைக்கு செலவிடப்படும்

நேரம் சமமாக இருக்கும் பாதுகாப்பான மற்றும் மனிதாபிமான பணி சூழலை சப்ளையர்கள் வழங்க வேண்டும்.

**கட்டாய மற்றும் குழந்தை ெ ாழிலார்களைப் பயன்படு ் துவதற்கு டை**

தொழிலாளரைக் கட்டாயப்படுத்தி அல்லது வற்புறுத்திப் பணியாற்றச் செய்வதற்கு நமது சப்ளையர்கள் ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை. அனைத்து பணியாளர்களும் தானாக முன்வந்து வேலை செய்ய விருப்பம் தெரிவித்திருக்க வேண்டும். நவீன அடிமைத்தனத்தின் வடிவங்கள், வெளியே சென்று வருவதற்கான தடை அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் அல்லது கடன் கொத்தடிமை வடிவங்கள் ஆகியவற்றை நாடாமல் இருக்க வேண்டும். பங்கேற்பாளர்களுக்குத் தெளிவாகப் பயனளிக்கும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி

அல்லது பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இல்லாவிட்டால் பொருத்தமான தொழிலாளர் சட்டத்தால் மற்றும் ILO வழிகாட்டுதல்களில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதிலிருந்து சப்ளையர்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர்.

**அமைப்பு சு ந்திரம்**

உள்ளூர் சட்டங்களுக்கு இணங்க சப்ளையர்கள், தொழிற்சங்கங்கள் அல்லது தொழிலாளர் கவுன்சில்களுடன் இணைந்து செயல்படக்கூடிய அல்லது தனித்து செயல்படக்கூடிய சங்கம் மற்றும் அமைப்புகளில், தங்கள் பிரச்சனை தொடர்பாக தனிப்பட்ட விருப்பத்தை செயல்படுத்த அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து சப்ளையர்கள் மதித்து நடக்க வேண்டும்.துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு

Magna -இன் கொள்கைகள் பொருந்தக்கூடிய மனித உரிமைச் சட்டங்களின் தேவைகளுடன் ஒத்துப்போகின்றன. சப்ளையர்கள் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்பட்ட தனிப்பட்ட குணாதிசயங்களுக்கு முரணான அனைத்து வகையான துன்புறுத்தல் மற்றும் பாகுபாடுகளை தடைசெய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம், மேலும் இந்த சிக்கல்களை முன்கூட்டியே தீர்க்க மற்றும் தீர்வு காண வலுவான பயிற்சி, புகார் மற்றும் விசாரணை நடைமுறைகளை உருவாக்க வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**நியாயமான மற்றும் பாகுபாடற்ற ஊதிய வழங்கல்**

இதேபோல், அனைத்து ஊழியர்களையும் பாரபட்சமற்ற முறையில் நடத்துவதை உறுதிசெய்யும் நியாயமான ஊதியம் வழங்கல் நடைமுறைகளைப் பயன்படுத்தும் போது, அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்ட, பொருந்தக்கூடிய குறைந்தபட்ச ஊதியச் சட்டங்களை பூர்த்தி செய்யும் அல்லது மீறும் நியாயமான வாழ்க்கைத் தரத்தை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட தனிப்பட்ட குணாதிசயங்களைப் பொருட்படுத்தாமல், ஊதியம் வழங்கல் திட்டங்கள் குறிப்பிட்ட அளவில் மற்றும் தொழில்துறையின் அளவுகோல்களின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

**பாதுகாப்பு பணியில் இருக்கும் பணியாளர்கள் பொறுப்புடன் செயல்படுவது**

Magna அதன் பணியாளர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கங்களுக்காக பாதுகாப்பு பணியாளர்களின் சேவைகளைப் பயன்படுத்துகிறது. பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட உரிமைகளை மதிக்கும், ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் வகையில், பாதுகாப்பு பணியாளர்கள் பொறுப்புடன் செயல்பட, பொருந்தக்கூடிய ILO தரநிலைகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலி சட்டங்களை நாம் அங்கீகரித்து பின்பற்றுகிறோம். விநியோகச் சங்கிலியில் உள்ள பணியாளர்களின் உள்ளார்ந்த உரிமைகளைப் பாதுகாக்க, ஒப்பிடக்கூடிய நெறிமுறைகளை, நமது சப்ளையர்கள் நிறுவ வேண்டும்.

**பொருந் க்கூடிய அனை ்து மனித உரிமைச் சட்டங்களுக்கும் இணங்க Magna உறுதிபூண்டுள்ளது, நமது சப்ளையர்களிடமிருந்தும் அதே உறுதிப்பாட்டைக் கோருகிறோம்.**

# பன்முகத்தன்மை மற்றும் உள்ளடங்கிய நிலை

உலகெங்கிலும் இருக்கும் நமது வளாகங்களில் பல்வேறு வகையான மற்றும் பல்வேறு வகையான கலாச்சாரத்தை சேர்ந்த பணியாளர்களை Magna பணியமர்த்தி இருக்கிறது. மேலும் அது நமது வணிகத்திற்கான ஒரு சிறந்த நன்மையாக விளங்குகிறது. அதனால்தான், பாலினம், இனம், இனப் பின்னணி,

நிறம், உடல் அம்சங்கள், தேசியம் அல்லது வம்சாவளி, மொழி வேறுபாடு, மதம், பாலியல் நோக்குநிலை அல்லது பாலியல் அடையாளம், குடும்பம் அல்லது திருமண நிலை, உடல், மன வளர்சிக் குறைபாடு, சமூகப் பொருளாதார நிலை அல்லதுசட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறு எந்தத் தனிப்பட்ட பண்புகளையும் அடிப்படையாகக் கொண்ட பணியிடத் துன்புறுத்தல் மற்றும் பாகுபாட்டை நமது சப்ளையர்கள் தடைசெய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.



பரவலான சப்ளையர் பன்முகத்தன்மை, பரந்த அளவிலான முன்னோக்குகளை மேம்படுத்துவதற்கும், அதிக தீர்வுகளை வழங்குவதற்கும், நமது நிறுவனத்திற்கு அதிக வெற்றியை வழங்குவதற்கும் உதவுகிறது என்று நாம் நம்புகிறோம். Magna அனைத்து சப்ளையர்களையும் பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கி செயல்படுவதற்கு *Magna* வரவேற்கிறது. இந்த முயற்சியில், சப்ளையர்கள் அவர்களின் பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கும் திட்டங்கள், முயற்சிகள் மற்றும் சாதனைகளின் பொருத்தமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள கோருகிறது. அத்தகைய தகவல்கள் நேரடியாக *Magna* அல்லது நிறுவனத்தின் சார்பாக செயல்படும் மூன்றாம் தரப்பினரால் சேகரிக்கப்படும். இதற்காக ஏதேனும் கருத்துக்கணிப்பு அல்லது தணிக்கை மேற்கொள்ளப்பட்டால் சப்ளையர்கள் அவற்றிற்கு பதிலளிக்க வேண்டும்.

- சப்ளையர்கள் தங்கள் பணியாளர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். குறிப்பாக, அவர்கள் கட்டாயப்படுத்திய மற்றும் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்
- சப்ளையர்கள் சுற்றுச்சூழல் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர்களால் சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கத்தைத் தவறாமல் கண்காணிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.சப்ளையர்கள் பணியிடத் துன்புறுத்தல் மற்றும் முறையற்ற பாகுபாடு ஆகியவற்றையும் தடைசெய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- சப்ளையர்கள் தங்கள் பணியாளர்களுக்காகப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தைப் பராமரிக்க வேண்டும்.

# ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு




எங்கள் சப்ளையர்கள் பொருந்தக்கூடிய அனைத்து ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புச் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும். பணியாளர்களுக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வழங்கிய பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தைப் பராமரிப்பதுடன், மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் காயங்களைக் கையாள்வதற்கான ஒரு நடைமுறையைக் கொண்டிருப்பதும் இதில் அடங்கும். ISO 45001 தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புத் தரநிலைகள் அல்லது அதைப் போன்ற தரநிலைகளின் சான்றிதழைப் பெற சப்ளையர்களை Magna ஊக்குவிக்கிறது.

# சுற்றுச்சூழல் பொறுப்பு

சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பேற்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் சப்ளையர்கள் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பூர்த்தி செய்வார்கள் அல்லது அதையும் தாண்டிச் செயல்படுவார்கள் என்றும், சுற்றுச்சூழலில் அவர்களின் செயல்பாடுகளின் தாக்கத்தைக் குறைக்க உறுதிபூண்டிருக்கிறார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

சப்ளையர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளால் சுற்றுச்சூழலில் ஏற்படும் தாக்கத்தைத் தொடர்ந்து மதிப்பிட்டு அதை கண்காணிக்க வேண்டும், ஆற்றல்




மற்றும் பிற வளங்களை (மின்சாரம் மற்றும் நீர் உட்பட) முறையாக மற்றும் குறைவாக பயன்படுத்த வேண்டும், கழிவுகள் மற்றும் உமிழ்வுகளைக் குறைக்க வேண்டும், தயாரிப்பு ஆயுள் சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பொருட்களை மறுசுழற்சி செய்ய வேண்டும், அபாயகரமான மற்றும் தீ பற்றக்கூடியப் பொருட்களை

பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமான முறையில் சேமித்து வைக்க வேண்டும் மற்றும் வடிவமைப்பு மற்றும் புதுமையாக்கம் மூலம் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

ISO 14001 சுற்றுச்சூழல் தரநிலைகள் மற்றும் ISO 50001 ஆற்றல் மேலாண்மை தரநிலை (அல்லது அதன்பிறகு அமல்படுத்தப்பட்ட தரநிலைகள்) ஆகியவற்றின் சான்றிதழ்களைப் பெறுவதை ஊக்குவிக்கிறோம். சப்ளையர்கள் வழங்கும் பொருட்களில் இருக்கக்கூடிய வேதிப்பொருள்கள் இரசாயன கட்டுப்பாட்டுத் தேவைகளுக்கு இணங்க வேண்டும். அதாவது REACH (R-பதிவு, E-மதிப்பீடு, A-அங்கீகாரம் மற்றும் R-இரசாயனங்களின் கட்டுப்பாடு) மற்றும் TSCA (நச்சுப்பொருட்கள் கட்டுப்பாட்டு சட்டம்).

Magna-இன் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கொள்கையை ˙ டிக்கவும்.

நிலைத்தன்மை மற்றும் டிகார்பனைசேஷன்

குறைந்த கார்பன் விநியோகச் சங்கிலி மற்றும் நமது விநியோகச் சங்கிலியில் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பது மற்றும் சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுவது போன்றவற்றால் *Magna* நிலையான எதிர்காலத்தை உறுதிப்படுத்த முயல்கிறது. *Magna* -இன் சப்ளையர்கள் இந்த முயற்சியில் பங்கேற்க மற்றும் விநியோகச் சங்கிலியின் அனைத்து நிலைகளிலும் தெரிவுநிலை மற்றும் சரியான விடாமுயற்சியை மேம்படுத்த உதவுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பங்கேற்பானது, டிகார்பனைசேஷன் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு, கழிவுகளை குறைப்பது, நீர் நுகர்வை குறைப்பது மற்றும் நீரின் மாசுபாட்டைக் குறைப்பது, மண்வளத்தைப் பாதுகாப்பது மற்றும் காடுகளைப் பாதுகாப்பது, இனங்கள் மற்றும் பல்லுயிர்களை முறையாகப் பாதுகாப்பது, பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் ஒருவர் வசிக்கும் / பயன்படுத்தும் இடத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவது / சட்டவிரோதமாக கையகப்படுத்துவது அல்லது அந்த இடத்திற்கான அணுகலை மறுப்பது போன்ற *Magna* -இன் முன்னுரிமைகள் மற்றும் செயல்பாடுகளுடன் இணைந்திருக்க வேண்டும்.

அனைத்து சப்ளையர்களும் தங்கள் கார்பன் தடத்தை குறைப்பதில் பங்கேற்குமாறு Magna ஊக்குவிக்கிறது. இந்த முன்முயற்சியை ஆதரிக்க,


சப்ளையர்கள் தங்கள் கார்பன் உமிழ்வுகள் மற்றும் விநியோகச் சங்கிலி தொடர்பான கோரப்படும் தரவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தத் தரவு *Magna* ஆல் நேரடியாகச் சேகரிக்கப்படும் அல்லது நிறுவனத்தின் சார்பாக செயல்படும் மூன்றாம் தரப்பினரால் சேகரிக்கப்படும். இந்த தலைப்பில் மேற்கொள்ளப்படும் கருத்துக்கணிப்பு அல்லது தணிக்கைக்கு சப்ளையர்கள் பதிலளிக்க வேண்டும்.

சப்ளையர்கள் டிகார்பனைசேஷனுக்கான வழிமுறையை நிறுவி, தங்கள் இலக்குகள் மற்றும் ஒட்டுமொத்த உத்திகளை *Magna* உடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டங்களும் செயல்திட்ட வரைபடங்களும் கூட்டாக நமது இலக்குகளை நோக்கி முன்னேறி வருவதையும், தொடர்புடைய இடர்களைக் குறைப்பதையும், பங்குதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் உறுதி செய்கிறது

# நமது செயல்பாடுகளின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்

எங்கள் பணியாளர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் செயல்களின் மூலம் தங்கள் நேர்மையைக் காட்ட வேண்டும். எங்கள் நன்னெறித் தரநிலைகளுக்கு ஏற்ப பணியாளர்கள் யாராவது வாழத் தவறிய ஒரு சூழ்நிலையை பணியாளர்கள் அறிந்தால் அவர்கள் அதைப் பற்றி வெளிப்படையாகப் பேச வேண்டியதும் அவசியம். இந்தக் கோட்பாட்டை மீறுவதை எங்கள் சப்ளையர்கள் அறிந்தால் அவர்களும் அதையே செய்ய வேண்டும்.

## அக்கறை சார்ந்த முரண்பாடு



எங்கள் வணிகக் கூட்டாளர்களுடனான உறவுகள் நேர்மையாகவும் சிறந்த வணிகத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருப்பதை உறுதிப்படுத்த, எங்கள் பணியாளர்கள் அக்கறை சார்ந்த முரண்பாடுகளை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். இதேபோல், எந்தவொரு சப்ளையரும் சப்ளையருக்குப் பயனளிக்கும் வணிக முடிவை எடுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்தும் Magna பணியாளருடன் குடும்பம் அல்லது இதர நெருங்கிய தனிப்பட்ட

உறவைக் கொண்டிருந்தால் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

Magna-இன் அக்கறை சார்ந்த முரண்பாடுகள் கொள்கையை படிக்கவும்.

# Magna -இன் தகவல்கள் மற்றும் அறிவுசார் சொத்துக்களின் பாதுகாப்பு

ஒரு சப்ளையராக, Magna அல்லது அதன் வணிகக் கூட்டாளர்கள் (Magna -இன் வாடிக்கையாளர்கள் உட்பட) உங்களுக்கு அறிவுசார் சொத்து, இரகசிய, தனிப்பட்ட தகவல்களை ("தகவல்கள்") வழங்கலாம் அல்லது அளிக்கலாம்.

ஒரு முறையான வணிக நோக்கத்துடன் தொடர்புடைய சட்டப்படி "தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம்" இருந்தால் தவிர, சப்ளையர்கள் இரகசியமாக வைத்திருக்க வேண்டும் மற்றும் *Magna* அல்லது மேக்னாவின் வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் (மற்ற *Magna* பணியாளர்கள் உட்பட) அல்லது வணிக கூட்டாளர்களுக்கு சொந்தமான எந்த நபர், நிறுவனம் அல்லது நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கக்கூடாது மேலும் அவ்வாறு தருவிக்க வேண்டிய நிலையில் தெரிவிப்பதற்கு முன் இரகசியத்தன்மையை வெளிப்படுத்துவதற்கான உடன்படிக்கையின் அடிப்படையில் அதை வெளிப்படுத்த வேண்டும். மேலும், நமது சப்ளையர்கள், அவர்களின் பணியாளர்கள் மற்றும் அவர்களின் சப்ளையர்கள், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் *Magna* உடனான ஒப்பந்தங்களின் அடிப்படையில் தகவல்களைக் கையாள வேண்டும் மற்றும் செயல்படுத்த வேண்டும்.

அத்தகைய தகவல்களின் அணுகல் மற்றும் பராமரிப்பு தொடர்பாகப் பொருத்தமான பாதுகாப்பு மற்றும் நேரடிப் பாதுகாப்பு நடைமுறைகளை நீங்கள் பராமரித்து செயல்படுத்த வேண்டியதின் அவசியத்தை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள், அவை:

- அத்தகைய தகவல்களுக்கான தொழிற்துறைத் தரநிலைகளுக்குக் குறைந்தபட்சம் சமமாக இருக்க வேண்டும்; மற்றும்
- தற்செயலான அல்லது சட்டவிரோத அழிப்பு, இழப்பு, மாற்றம், அல்லது அங்கீகரிக்கப்படாத வெளிப்படுத்தல் அல்லது தகவல்களை

அணுகுவதற்கு எதிராக நியாயமான பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் நிறுவன பாதுகாப்புகளை வழங்கும் வகையில்.

கூடுதலாக, நீங்கள் ஒருபோதும் அத்தகைய தகவல்களை விற்பனை செய்யக்கூடாது, Magna-இன் அனுமதியின்றி அதை ஒருபோதும் வெளியிடக்கூடாது, நீங்கள் தயாரிப்புகள் மற்றும்/அல்லது சேவைகளை Magna-க்கு வழங்கியதன் நோக்கங்களுக்காக மட்டுமே தகவல்களைப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டும், மேலும் நமது உறவின் முடிவில் (அல்லது அது இனி தேவைப்படாதபோது) அத்தகைய தகவல்களை உடனடியாகத் திருப்பி வழங்கவும் அல்லது அழிக்கவும் செய்வீர்கள் என்றும் உறுதியளிக்கிறீர்கள், மேலும் தகவல்களுக்கு, Magna உடனான உங்கள் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும், நீங்கள் கையெழுத்திட்ட எந்த வெளிப்படுத்தாமை ஒப்பந்தத்தையும் பார்க்கவும்.


Magna-இன், அதன் ஊழியர்கள் அல்லது வணிகக் கூட்டாளர்களின் (வாடிக்கையாளர்கள் உட்பட) இரகசிய அல்லது தனிப்பட்ட தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நீங்கள் அறிந்தால் அல்லது Magna-இன் அறிவுசார் சொத்துரிமை மீறப்பட்டிருந்தால், உங்கள் முதன்மை Magna தொடர்பு மையத்திடம் அதனை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

# நல்ல தகவல் தொடர்பின் மூலம் ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்



Magna-இன் சப்ளையர் என்ற வகையில், இந்த கோட்பாட்டில் பொதிந்துள்ள நேர்மை மற்றும் ஒருமைப்பாட்டின் மதிப்புகளை நீங்கள் நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக, இந்தக் கோட்பாட்டின் சில கூறுகளை மீறுவது என்பது நாம் செயல்படும் அதிகார வரம்புகளில் உள்ள சட்டத்தை மீறுவதாகும். Magna அதன் சப்ளையர்களால் ஏற்படும் எந்தவொரு சட்ட மீறல்களையும் பொறுத்துக்கொள்ளாது.

# கவலைகளைப் புகாரளித்தல் மற்றும் பழிவாங்குதல் இல்லாமை



உங்கள் பணியாளர்கள் இந்தக் கோட்பாட்டைப் புரிந்துகொண்டு அதன் தேவைகளுக்கு இணங்கத் தேவையான நடவடிக்கைகளை நீங்கள் எடுத்து உறுதிசெய்ய வேண்டும் என்று கோருகின்றோம். சப்ளையர் அல்லது Magna பணியாளர்களால் சட்டம் அல்லது இந்தக் கோட்பாடு (Magna-க்காகப் பணியாற்றும் போது) மீறப்படுவதை எங்கள் சப்ளையர்கள் மற்றும் அவர்களின் பணியாளர்கள் அறிந்தால் உடனடியாக அதைத் தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.



உங்கள் முதன்மைத் தொடர்பாக உள்ள Magna பணியாளர், Magna-இன் இணக்கக் குழுவின் உறுப்பினர் அல்லது magnahotline.com என்பதில் கிடைக்கும் Magna-இன் புகாரளித்தல் லைனைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் புகாரளிக்கலாம். அந்த ஹாட்லைனில் அநாமதேயமாக புகாரளிக்கலாம் (சட்டப்படி அனுமதிக்கப்படும் நாடுகளில்).

சூழ்நிலைகளைப் பொறுத்து, இந்தக் கோட்பாட்டிற்கு ஒரு சப்ளையர் இணங்கத் தவறியதைத் தீர்க்க Magna பலவிதமான நடவடிக்கைகளை எடுக்கலாம், எடுத்துக்காட்டாக, சரியான நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும் வரை சப்ளையருடனான வணிகத்தை இடைநிறுத்தி வைத்தல் அல்லது சப்ளையருடனான உறவை நிறுத்தி வைத்தல்.

## சப்ளையர் இடர் நிர்வாகக் கோரிக்கைகள்



அவ்வப்போது, உங்கள் வணிகச் செயல்பாடுகள் (உதாரணமாக, நிறுவன மேலாண்மை, விநியோகச் சங்கிலி, பணி நிலைமைகள் மற்றும் மனித உரிமைகள், மூலப்பொருட்களைப் பொறுப்பாக கொள்முதல் செய்வது, நிதி அறிக்கைகள், சைபர் செக்யூரிட்டி போன்றவை) பற்றிய விவரங்களை (கருத்துக்கணிப்பு, தணிக்கை அல்லது மதிப்பீடு மூலம்) உங்களிடமிருந்து Magna -இன் சப்ளையர் இடர் மேலாண்மை குழு (அல்லது அவர்கள் சார்பாக செயல்படும் மூன்றாம் தரப்பினர்) கோருவார்கள். அத்தகைய கோரிக்கைகளுக்கு நீங்கள் உடனடியாகவும் முழுமையாகவும் பதிலளிக்க வேண்டும். உங்கள் பதில்களின் அடைப்படையில் Magna நிர்ணயித்த ஒரு நியாயமான காலக்கெடுவிற்குள் நீங்கள் சில திருத்தங்களை செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம்

## பிற தேவைகளுடனான முரண்பாடு

இந்த ஆவணத்தில் ஏதேனும் தேவைகள் Magna உலகளாவிய விநியோகச் சங்கிலியின் தேவைகள் அல்லது Magna சப்ளையர்களின் வேறு ஏதேனும் தேவைகளுடன் முரண்பட்டால் (எ.கா. உங்களுக்கும் Magna-க்கும் இடையிலான எந்தவொரு ஒப்பந்தத்தின் கீழும்), இந்த ஆவணத்தின் தேவைகளே மேலோங்கும்.



- சப்ளையர்களின் பணியாளர்கள் இந்தக் கோட்பாட்டை நன்கு அறிந்திருக்க வேண்டும் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு இணங்க வேண்டும்.
- இந்தக் கோட்பாடு அல்லது சட்டத்தை மீறுவதை அறிந்தால் சப்ளையர்கள் அதைத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு நல்ல நம்பிக்கையின் அடிப்படையில்

இணக்கக் கவலையை எழுப்பும் எந்தவொரு பணியாளரையும் பழிவாங்குவதிலிருந்து சப்ளையர்கள் தடைசெய்யப்பட்டுள்ளனர்.

## ஆதரவு சட்ட இணக்க நிபுணர்கள்

இந்தச் சப்ளையர் நடத்தைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகளின் தேவைகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், நீங்கள் Magna-இல் உள்ள உங்களை முதன்மைத் தொடர்பைத் தொடர்புகொள்ள வேண்டும். உங்கள் கேள்விகளை Magna-இன் அறநெறிகள் மற்றும் சட்ட இணக்கத் துறைக்கும் அனுப்பலாம்.

Forward.
For all.

Effective Date: January 1, 2017
Last Reviewed: April 3, 2024
Next Review Date: Q2, 2027
Issued by: Ethics and Legal Compliance
Approved by: Magna Compliance Council

magna.com